දුරකථන ) 2698475
தொலைபேசி ) 2698490
Telephone ) 2698507

ෆැක්ස් ) 2692913
பெக்ஸ் ) 2693869
Fax )

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவரி ) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ් අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல ) NCCP/ADM/29/2018
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 20 03.2018
Date )

# සෞඛ්‍ය, පෝෂණ හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

பொது சுற்றறிக்கை இல: 01-14/2018

சகல மகாண சுகாதார பணிப்பாளர்களுக்கும்,

சகல பிராந்திய சுகாதார பணிப்பாளர்களுக்கும்,

சகல சுகாதார நிறுவனங்களின் தலைவர்களுக்கும்,சுகாதார த்தியர்கள் டங்கலாக,

**வெற்றிலைக் கூர் மெல்லுதல் மற்றும் அதன் விற்பனை ,புகையிலை ,பாக்கு உற்பத்திகள் வைத்தியசாலை மற்றும் அனைத்து சுகாதார பராமரிப்பு நிலைய எல்லைகளுக்குள் தடை செய்தல்.**

வரலாற்று காலம் முதல் வெற்றிலை மெல்லுதல் இலங்கையர்களிடையே சமூக கலாச்சார ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பழக்கமாக கருதப்படும் அதேவேளை தொடர்ந்தும் இட ம் பெற்று வருகின்றது..இருப்பினும் புகையிலையுடனோ அல்லது அது இல்லாமலோ வெற்றிலை மெல்லுவது ,புகையிலை ,பாக்கு சேர்ந்த கலவைகள் சாப்பிடுவது வாய் புற்று நோய்க்கான முக்கிய ஆபத்தான காரணிகளாக உள்ளன என்பதற்கு போதுமான விஞ்ஞான ரீதியான சான்றுகள் உள்ளன.

இலங்கையில் நகர்புற சமூகங்களுடன் ஒப்பிடும் போது கிராமப்புற சமூகங்களிடையே வெற்றிலை மெல்லுதல் அதிகமாக உள்ளது.வயதான பிரிவினரிடையே இது அதிகமாக காணப்படுகின்றது..இருப்பினும் வர்த்தக ரீதியாகவும்,சுயமாக தயாரிக்கப்பட்ட புகையற்ற புகையிலை,,பாக்கு உற்பத்திகளின் பாவனை இள வயது பிரிவினரிடையே அதகரித்து வரும் போக்கு வெளிப்படுகின்றது.இள வயதில் பழகிக் கொள்ளும் ஆரொக்கியமற்ற பழக்கங்கள் நீண்ட காலத்திற்கு நீடித்திருக்க்க் கூடியவையாக இருப்பதோடு மீண்டும் பழைய நிலைய அடைவது கஸ்டமானதாக இருக்கும்.தொற்றாத நோய்களுக்கான ஆபத்து காரணி தொடர்பான 2015 ல் இலங்கையில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வில் 18 ற்கும் 69 வயதிற்கும் இடைப்பட்டவர்களில் கால்வாசிக்கும் மேலான (26.0 வீதம் )ஆண்களும் 5 வீதம் பெண்களும் புகையற்ற புகையிலை பாவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.2003 ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தேசிய பற் சுகாதார ஆய்வு வெற்றிலை மெல்லுதல் 34 – 44 வயதுப் பிரிவினரிடையே 34 வீதமும் 65-74 வயதினரிடையே 47.7 வீதமும் காணப்படுவதாக காட்டியுள்ளது.

உதடு,வாய்க்குழி,தொண்டை பகுதிகளில் ஏற்படும் செதிள் கல புற்று நோயானது வாய் புற்று நோய் என பாராம்பரிய ரீதியாக வரையறுக்கப்படுகின்றது.புற்று நோய் சம்பவ தரவுகளின் பிரகாரம் 2010 ல் உதடு,வாய்க்குழி,தொண்டை பகுதிகளில் ஏற்படும் புற்று நோயானது

இலங்கையில் அறிகையிடப்பட்ட புற்று நோய்களில் 14.3 வீதம் என கணக்கிடப்பட்டுள்ளது.இது ஆண்களில் பொதுவாக காணப்படும் புற்று நோயாகும்..2010 ல் ஆண்களில் புதிதாக அறிக்கையிடப்பட்ட புற்று நோய்களில் 24 வீதம் உதடு,வாய்க்குழி,தொண்டை புற்று நோயாகும்வெற்றிலை மெல்லுதலானது வாய் புற்று நோய்க்கான ஆபத்து காரணி என்பது மட்டுமல்லாமல் இதனால் சுகாதார மற்றும் ஒப்பனை பிரச்சினைகளும் ஏற்படும்.வெடித்த உதடுகள் ,நாக்கு தேய்மானமடைந்த பற்கள்,வாய் மற்றும் பற்களில் நிற மாற்றம் போன்றவை வெற்றிலை மெல்லுபவர்களில் ஆளுமை பிரச்சினைகளிலும் தாக்கம் செலுத்தலாம்..வெற்றிலை துப்பல் சுற்றாடலுக்கு விரும்பத் தகாத தன்மையை ஏற்படுத்துவதுடன்,நிறுவன சுற்றாடல் சுகாதாரத்திற்கு அது ஒரு பாரிய அச்சுறுத்தலாகவும் கருதப்படலாம். ,

எனவே 2017 நவம்பர் மாதம் 24 ம் திகதி நடை பெற்ற புற்று நோய் தடுப்பு தேசிய ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் வைத்தியசாலை வளாகத்தினுள்ளும்,சகல சுகாதார பராமரிப்பு நிலைய பகுதிகளிலும் வெற்றிலைக் கூர் மெல்லுதல் உடனடியாக தடை செய்யப்பட்டுள்ளதோடு வெற்றிலைக் கூர் விற்பனை ,எவ் வகையானதுமான புகையிலை ,பாக்கு உற்பத்திகள் விற்பனையும் வைத்தியசாலை வளாகத்தினுள்ளும்,சகல சுகாதார பராமரிப்பு நிலைய பகுதிகளிலும் தடை செய்யப்படும்..

சகல நிறுவனத் தலைவர்களும் தங்களது நிறுவனங்கள் வெற்றிலைக் கூர் மெல்லுதல் ,மற்றும் அதன் விற்பனை ஆகியவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பை ஏற்க வேண்டும்.மேற்படி அறிவுறுத்தல்களை பின்பற்றாத ஊழியர்களுக்கு எதிராக ஒழுங்கர்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்..எவராவது இந்த பழக்கத்திலிருந்து விடுபட விரும்பி சிரமங்களை எதிர் நோக்கினால் அவர்கள் பல் வைத்தியரொருவரிடம் பரிந்துரைக்கப்பட வேண்டும்.

அனைத்து மாகாண மற்றும் பிராந்திய அதிகாரிகள் ,இலங்கையில் வாய் புற்று நோய் மற்றும் அதனுடன் தொடர்பான உடல நல பிரச்சினைகளின் சுமையை குறைப்பதற்கான இம் முயற்சியில் தேவையான நடவடிக்கைகள் மேற் கொண்டு இதனை எளிதாக்கவும் ,ஒருங்கினைக்கவும் அறிவுறுத்தப்படுகின்றனர்

மேற்கொன்டு ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால் தயவு செய்து தேசிய புற்று நோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் பணிப்பாளர் அல்லது அதன் விசேட சமூக பல் வைத்திய நிபுனருடன் தொடர்பு கொள்ளவும்.

Janaka Sugathadasa
Secretary
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10, Sri Lanka.

யனக்க சுகத்தாச,

செயளாலர்

சுகாதார , போசணை மற்றும் சுதொச மருத்துவ அமைச்சு.

பிரதி:

கௌரவ. அமைச்சர் சுகாதார , போசணை மற்றும் சுதொச மருத்துவ அமைச்சு - உங்களுடைய தயவான கவனத்திற்கு

கௌரவ பிரதி அமைச்சர் சுகாதார , போசணை மற்றும் சுதொச மருத்துவ அமைச்சு- உங்களுடைய தயவான கவனத்திற்கு

சகல மாகாண சுகாதார அமைச்சர்கள்

சகல மாகாண சுகாதார செயளாலர்கள்

பணிப்பாளர் சுகாதார சேவைகள்

சகல பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்

பணிப்பாளர்- தேசிய புற்றுநோய் தடுப்பு திட்டம்

பணிப்பாளர் - தொற்றாத நோய்கள்

பணிப்பாளர் -பல் வைத்திய சேவைகள்

பணிப்பாளர் - மனநல வைத்திய சேவைகள்

பணிப்பாளர் - ஆரம்ப வைத்திய சேவைகள்

பணிப்பாளர்- குடும்ப நல வைத்திய சேவைகள்

மாகாண விசேட சமூக நல வைத்தியர்/ விசேட சமூக நல பல் வைத்தியர்

முதன்மை வைத்தியர் ( பாடசாலை சுகாதாரம் )

சகல பிராந்திய பல் வைத்தியர்கள்

சகல வைத்தியர்கள் ( தொற்றாத நோய்கள் )

சகல வைத்தியர்கள் ( தாய் சேய் சுகாதார சேவைகள் )